# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 254/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | சண்முகசுந்தரம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October 2019.

நான் மூலைக்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன். வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.2. போலிசார் விசாரணைக்கு வந்ததாக சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக போட்டு கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

போலிஸ் விசாரணையில் 13.09.2011ம் தேதி 13.15 மணிக்கு நான்குநேரி காவல்நிலைய ஆய்வாளர் சம்பவ இடமான எதிரி சண்முகசுந்தரத்தின் கடையையும், அதன் சுற்றுபுறங்களையும் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்த சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு, தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.